# உழவு நாயகன்

விதை : 1 மலர் : 1

The Agriculture News Weekly. This e-paper Editing and publishing by Vetrivel Senthilkumar., this news magazine Run by Sathyam Group of Companies.


## வீடுகளில் சந்தன மரம் வளர்க்கலாமா?



பொதுவாக வீட்டில் நாட்டு வேம்பு, புங்கன், வில்வம், மா மரம், தென்னை, வாழை எனப் பல மரங்களை வளர்க்கலாம். ஆனால், எல்லா மரங்களுக்கும் ஒரே அளவிலான தண்ணீர்தான் கொடுக்கப் போகிறோம். அதனால் பழம் கொடுக்கும் மரங்களுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைப் பணம் கொடுக்கும் மரங்களுக்கும் கொடுக்கலாம். முன்பு, சந்தன மர வளர்ப்புக்குத் தடை இருந்தது. ஆனால், சில ஆண்டுகளுக்கு முன்னரே தடை நீக்கப்பட்டுவிட்டது. அதனால், வீட்டில் சந்தன மரங்களை நடலாம். குறிப்பிட்ட ஆண்டுகள் கழித்து அது ஒரு முதலீடாக மாறும். உதாரணமாக சந்தன மரங்களை வீட்டில் வளர்ப்பதற்கு வனத்துறையிடமே மரக்கன்றுகள் வாங்கி நடலாம். வளர்த்து வெட்டும்போது, அவர்களை வைத்தே வெட்டி வனத்துறையிடம் கொடுத்து விற்பனை செய்யலாம். விற்பனை விலையில் அவர்களுக்கு 20 சதவிகிதம் போக, நமக்கு 80 சதவிகிதம் வருமானம் கிடைக்கும். சந்தன மரம் ஓர் partial parasite ஆகும்.

அதாவது இதற்கு வளர்வதற்கு சில சத்துக்கள் தேவை, அவற்றை மண்ணில் இருந்து தானே நேரடியாக எடுத்துகொள்ள முடியாமல் வேறு செடிகளின் வேர்களுடன் ஒட்டி (Partial parasitic plants dependent on their hosts for water, nutrients etc) அதில் இருந்து சத்துக்களை பெற்றுக்கொள்ளும் தன்மை உடையது.

எனவே சந்தன நாற்றுகளுடன் சவுக்கு (Casuarina) நாற்று அல்லது கொடுக்காப்புளி (Manila tamarind எனும் Kodukkaapuli) போன்ற நாற்றுக்களையும் நட வேண்டும். இதுபோக மரச்சாமான்கள் செய்ய உதவும் மரங்களையும் வளர்க்கலாம். வளர்க்கக்கூடாத மரங்கள் என்றெல்லாம் இல்லை. பெரும்பாலும் முள் உதிரும் மரங்களை வளர்ப்பதை மக்கள் தவிர்த்துதான் வருகிறார்கள்.

## உழுறது ஆம்பளைங்க வேலை மட்டும் இல்ல... வயலில் இறங்கி டிராக்டர் ஓட்டும் இளம்பெண்!




குஜராத்தின் ஆரவள்ளி மாவட்டத்தில் உள்ள காதா கிராமத்தைச் சேர்ந்த இளம் பெண் தன்வி பட்டேல், தன் வீட்டின் முழுப் பொறுப்பையும் தனது தோள்களில் சுமக்கிறார்.

எல்லாவற்றையும் மிகச்சீராக நிர்வகித்து வரும் இவரது திறமையை, கிராம மக்களும் கூட பாராட்டுகிறார்கள். விதைப்பு காலம் நடந்து வருவதால், தன்வி தன் வயலில் அனைத்து பணிகளையும் செய்து வருகிறார்.

வெயில், மழையைப் பொருட்படுத்தாமல் டிராக்டர் மூலம் நிலத்தை உழுகிறார். தன்வி தனது கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு மூலம், ஆண்களை விட பெண்கள் எவ்விதத்திலும் குறைந்தவர்கள் இல்லை என்ற வலுவான செய்தியை சமூகத்திற்கு உணர்த்துகிறார்.




# வேளாண் கடன் வழங்கும் இந்திய வங்கிகள்

வேளாண் கடன் வழங்கும் இந்திய வங்கிகள்....
ஆந்திரா வங்கி
பரோடா வங்கி
பாங்க் ஆப் இந்தியா
தேனா வங்கி
ஓரியண்டல் காமர்ஸ் வங்கி
இந்திய ஸ்டேட் வங்கி
சிண்டிகேட் வங்கி
விஜயா வங்கி
பயனுள்ள வங்கித்தொடர்புகள்

வங்கிகளின் தேசியமயமாக்கல் என்பது,வேளாண்மையை பிரதானத் தொழிலாகக் கொண்ட பல்வேறு தொழில்கள் சார்ந்த பொருளாதார மண்டலங்களுக்கு கடன்வசதி செய்து தருவதற்கான சிறந்த நடவடிக்கையாகும். ஆற்றல் வாய்ந்த வளர்ந்துவரும் வேளாண் துறைக்கு, அதன் எல்லாவித வளர்ச்சியையும் துரிதப்படுத்துவதற்கு வங்கிகள் மூலம் போதுமான நிதி தேவைப்படுகிறது. 05 லிருந்து தொடங்கும் மூன்று வருடங்களுக்கு, வேளாண்துறைக்கான கடனை இரட்டிப்பாக்கும்படி இந்த வங்கிகளை அரசு அறிவுறுத்தியுள்ளது. பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்தில், அரசு விவசாயத்திற்கு அளித்துள்ள சிறப்பு கவனம் மற்றும் நிதி ஒதிக்கீடு, இவற்றுடன் வங்கிகளால் அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்களின் பயன்களைப் பெறுவது இப்போது விவசாயிகளின் கையில்தான் உள்ளது. பின்வருபவை, சில தேசியமமாக்கப்பட்ட வங்களின் கடன் வாய்ப்புகளின் பட்டியலாகும்.

ஆந்திரா வங்கி
ஆந்திர வங்கியின் கிசான் பச்சை அட்டை
தனிமனித விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பாதுகாப்பு

பரோடா வங்கி
மானாவாரி விவசாயத்திற்கு பழைய டிராக்டர்களை வாங்குதல்
வேளாண் மற்றும் கால்நடை இடுபொருட்கள் வழங்கும் முகவர்கள்/ விநியோகஸ்தர்கள்/ விற்பனையாளர்களுக்கான நடப்பு முதலீடு
வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு அமர்த்திக்கொள்ளுதல்
தோட்டக்கலை வளர்ச்சி
கறவை மாடு வளர்ப்பு, பன்றி வளர்ப்பு, கோழி வளர்ப்பு, பட்டுப்புழு வளர்ப்பு போன்ற தொழிலில் ஈடுபட்டிருப்போருக்கு நடப்பு முதலீடு



தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் வேளாண் உபகரணங்கள், கருவிகள், உழவு மாடுகள் வாங்குவதற்ககும், நீர்ப்பசானவசதிகளை உருவாக்கு வதற்குமான நிதி உதவி.

பாங்க் ஆப் இந்தியா
ஸ்டார் கிஸான் அட்டை கூட்டு முறையில் விவசாயம் செய்வோர், எழுத்தின் படி மற்றும் எழுத்து மூலமற்ற குத்தைதாரர்கள் ஆகியோருக்கு கிஸான் சமாதான் அட்டை பயிர் சாகுபடி மற்றும் அதை சார்ந்த இதர முதலீடுகளுக்கு பி.ஓ.ஐ. ஷதாப்தி கிருஷி விகாஸ் அட்டை விவசாயிகளுக்கான எந்நேரமும் எவ்விடத்திலுமான மின்னணு வங்கி அட்டை வீரிய ஒட்டு விதை உற்பத்தி, பருத்தி ஆலை, சர்க்கரை ஆலை ஆகியவற்றிற்கு ஒப்பந்த வேளாண்மைக்கான நிதி உதவி
சுய உதவிக்குழுக்கள் மற்றும் மகளிர் மேம்பாட்டிருக்கான சிறப்புத் திட்டங்கள்.
ஸ்டார் ஸ்வராஜ்கர் பிரஷிக்ஷன் சன்ஸ்தான்விவசாயிகளுக்கு தொழில்முனைவோர் பயிற்சி வழங்குவதற்கான ஒரு புதிய முயற்சி
பயிர்க் கடன்கள் மூன்று லட்சம் வரை (வருடத்திற்கு ஏழு சதவீத வட்டியில்)
பிணை உத்தரவாதம்: 50000 ரூபாய் வரை, பிணை உத்தரவாதம் எதுவும் தேவையில்லை. ஆனால் 50000 ரூபாய்க்கு மேல், இந்திய ரிசர்வ் வங்கியின் உத்தரவுகள் கடைபிடிக்கப்படும்

தேனா வங்கி
தேனா குஜராத், மகாராஷ்ரா, சட்டீஸ்கர் மற்றும் யாத்ராவின் யு.டி. மற்றும் நகர் ஹாவேலி ஆகியற்றில் சிறப்பாக செயல்பட்டு இருக்கும் வங்கி தேனா வங்கியாகும்.
தேனா கிஸான் தங்கக்கடன் அட்டைத் திட்டம்
அதிகபட்சம் பத்துலட்சம் ரூபாய்வரை கடன் அளிக்கப்படும்
குழந்தைகளின் கல்வி உட்பட வீட்டுச் செலவுகளுக்காக பத்து சதவீதம்வரை அளிக்கப்படும்
ஒன்பது வருடம்வரை திருப்பிச் செலுத்த நீண்ட கால அவகாசம்
வேளாண் உபகரணங்கள், டிராக்டர்கள், நீர்தெளிப்பு/ சொட்டுநீர் பாசனமுறைகள், மின்சார பம்ப் செட்டுகள் போன்ற எல்லா விதமான வேளாண் முதலீட்டிற்கும் கடன் கிடைக்கும்
ஏழு சதவீத வட்டியில் மூன்று லட்சம் ரூபாய்வரை குறுகிய காலப் பயிர்க் கடன்
விண்ணப்பித்த பதினைந்து நாட்களுக்குள் கடன்கள் வழங்கப்படும்
50000 ரூபாய் வரையிலான வேளாண் கடன் மற்றும் வேளாண் ஆலோசனை மையம், வேளாண் வர்த்தக மையங்களுக்கான கடனுக்கு, 5 லட்சம் ரூபாய் வரையிலும் பணய உத்தரவாதம் தேவையில்லை

ஓரியண்டல் காமர்ஸ் வங்கி
ஓரியண்ட்ல் பச்சை அட்டைத் திட்டம்
வேளாண் கடன்களுக்கான ஒருங்கிணைந்த கடன் திட்டம்
குளிர்பதன அறைகள் / பண்டக சாலைகள் நிறுவுதல்
முகவர்களுக்கான நிதி உதவி

இந்திய ஸ்டேட் வங்கி
பயிர்க் கடன் திட்டம் சொந்த நிலத்தில் தயாரித் தவற்றைப் பாதுகாத்துவைத்தல் மற்றும் அடுத்த பருவகாலத்திற்கான கடன்களைப் புதுப்பித்தல்.
கிஸான் கடன் அட்டை திட்டம்
நில மேம்பாட்டுத் திட்டம், குறு நீர்ப்பாசனத் திட்டம்
ஒருங்கிணைந்த அறுவடைக்கான இயந்திரங்கள் வாங்குதல்
கிஸான் தங்க அட்டை திட்டம்
கிருஷி ப்ளஸ் திட்டம் கிராமப்புற இளைஞர்களுக்கு தேவைக்கேற்ப்ப டிராக்டர்களை வாடகைக்கு எடுக்க.
பிராய்லர் ப்ளஸ் திட்டம் : கோழி வளர்ப்பு
முன்னோடி வங்கித் திட்டம்

சிண்டிகேட் வங்கி
சிண்டிகேட் கிஸான் கடன் அட்டை
சூரிய அடுப்பு திட்டம்
வேளாண் ஆலோசனை மையம மற்றும் வேளாண் வியாரபார மையங்கள்

விஜயா வங்கி
சுய உதவிக் குழுக்களுக்கான கடன்கள்
விஜயா கிஸான் அட்டை
விஜயா பிளான்டர்ஸ் அட்டை
கிராமத் தொழிற்சாலைகள் மற்றும் கைவினை கஞைர்களுக்கான கே.வி.ஐ.சி. திட்டம்

பயனுள்ள வங்கித்தொடர்புகள்
ராஜஸ்தான் வங்கி
கனரா வங்கி
சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியா
கார்ப்பரேஷன் வங்கி
இந்தியன் வங்கி
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
இந்தியத் தொழில் முன்னேற்ற வங்கி
மைசூர் ஸ்டேட் வங்கி
இந்திய யூனியன் வங்கி
இந்திய யுனைடட் வங்கி
ஆக்ஸிஸ் வங்கி



# மொட்டை மாடி முழுக்க 4 ஆயிரம் மலர், காய்கறி செடிகள் மாடித்தோட்டத்தில் அசத்துகிறார் ரியல் எஸ்டேட் அதிபர்!





ஹரியானா மாநிலம், கர்னல் மாவட்டத்தில் வசித்து வருபவர் ராம் விலாஸ் சிங்க். கட்டடத் தொழில் பிசினஸ் செய்துவரும் இவரின் விருப்பமே செடிகளை வளர்ப்பதுதான். தொழிலில் பிஸியாக இருந்தபோதும், தன்னுடைய 4 மாடி வீட்டில் செடிகளை வளர்க்கத் தொடங்கியுள்ளார்.

25 ஆண்டுகளுக்கு முன்பு 8 சிறிய மண்பானைகளில் செடிகளை வளர்க்க ஆரம்பித்தவரின் வீட்டு மாடியில், தற்போது 4,000 செடிகள் அணிவகுக்கின்றன. சிமென்ட்டால் செய்யப்பட்ட தொட்டிகள், மண்பானைகள் மட்டுமன்றி டிரம், பக்கெட் என பிளாஸ்டிக் பொருள்களிலும் ஆயிரக்கணக்கான காய்கறிகள், பழங்கள், பூக்கள் மற்றும் அலங்காரச் செடிகளை வளர்த்து வருகிறார்.

இதையும் தாண்டி தனி யூடியூப் சேனல் ஒன்றையும் தொடங்கி நடத்தி வருகிறார். அதில் தன்னுடைய மாடித்தோட்ட அனுபவங்களைப் பகிர்ந்து வருகிறார். பயிற்சிகளும் கொடுக்கிறார். இன்ஸ்டாகிராம் பக்கத்திலும் தன்னுடைய தோட்டத்தில் இருக்கும் செடிகளின் புகைப்படங்களைப் பதிவிட்டு வருகிறார். தன்னுடைய கார்டனிங் யுக்திகளைக் குறித்து அவ்வப்போது மாணவர்களுக்கு ஆன்லைன் வகுப்புகளும் எடுக்கிறார்.

பல வகையான தாவரங்கள் இவரின் தோட்டத்தில் இருந்தாலும் மக்கள் அதிகம் ரசிப்பது, இவரின் பூந்தோட்டத்தைதான். மல்லிகை, ரோஜா, ஆர்க்கிட், சூரியகாந்தி, பெட்டூனியா, பூகெய்ன்வில்லியா, கிரிஸான்தமம், டயந்தஸ், சினேரியா போன்ற அழகுக்கான பூக்களை வளர்த்து வருகிறார்.

இதைத் தாண்டி காய்கறிகளில் வெள்ளை கத்திரிக்காய், எலுமிச்சை, காளான், முள்ளங்கி, மிளகாய், புடலங்காய், பூசணி, தக்காளி, காலிஃபிளவர், சீமை சுரைக்காய், பீன்ஸ், முட்டைக்கோஸ் மற்றும் பீட்ரூட் போன்ற காய்கறி வகைகளையும், வாழை, சப்போட்டா, கொய்யா, டிராகன் பழம், பப்பாளி, பீச், மாம்பழம் மற்றும் ஸ்ட்ராபெர்ரி போன்ற பழங்களையும், கொத்தமல்லி, புதினா, கீரைகள், துளசி, அஸ்வகந்தா போன்ற கீரைகளையும் வளர்க்கிறார்.

``நான் தோட்டக்கலையைப் படித்தோ, வீடியோக்களை பார்த்தோ, பொழுதுபோக்கில் ஈடுபடும் மற்றவர்களைப் பார்த்தோ செடி வளர்ப்பதைப் பற்றி கற்றுக்கொள்ளவில்லை. தோட்டம் போடுவதன் மூலம் கிடைக்கும் பயிற்சி, அனுபவம் மற்றும் தாவரங்கள் மீதான எனது அன்பின் காரணமாக எனக்கு இந்த திறமை வந்தது.

எனக்குச் சிறு வயதிலிருந்தே செடிகள் வளர்ப்பது பிடிக்கும். பூக்கள் மீதான என் ஈர்ப்பு முடிவில்லாதது. வண்ணமயமான பூக்களைப் பார்க்கும் போதெல்லாம், அதை என் வீட்டில் வளர்க்க வேண்டும் என எனக்கு ஆசை வரும். இப்படித்தான் தோட்டம் போட ஆரம்பித்தேன்.

படிப்படியாக, மரங்கள் மற்றும் காய்கறிகள் எனப் போட மாடித்தோட்டத்தில் உள்ள செடிகளின் எண்ணிக்கை விரிவடைந்தது. கடந்த 10 ஆண்டுகளில், பலவகையான பயிர்களைத் தோட்டத்தில் வளர்த்து வந்ததன் மூலம் இந்த எண்ணிக்கைக்கு வந்திருக்கிறேன். இச்செடிகள் அனைத்தும் வீட்டில் தயாரிக்கப்பட்ட உரங்களைப் பயன்படுத்தி இயற்கை முறையில் வளர்க்கப்படுகின்றன.

ரசாயன உரங்களைப் பயன்படுத்திய பிறகு, தாவரங்களில் உண்டாகும் திடீர் வளர்ச்சி தற்காலிகமானது மட்டுமே. இது மண்ணை பாழ்படுத்துகிறது. அப்படி வளரும் பொருள்களை உண்பது விஷத்தைச் சாப்பிடுவதைப் போன்றது. இயற்கை முறையில் செடிகளை வளர்ப்பது மற்றும் நஞ்சில்லா உணவை உண்பது நோக்கி மக்களை ஈர்ப்பதே எனது வாழ்வின் குறிக்கோள்'' என்று உற்சாகமாகக் குறிப்பிட்டுள்ளார்.






# கோவை கொடிசியாவில் நடந்த வேளாண்திருவிழாவில் பார்வையாளர்களை கவர்ந்த சத்யம் அக்ரோ கிளினிக் அரங்கம்



**விவசாயத்தை தொழிலாக்குவோம்! விவசாயிகளை தொழிலதிபராக்குவோம்!!**

# கோவை கொடிசியாவில் நடந்த வேளாண்திருவிழாவில் பார்வையாளர்களை கவர்ந்த சத்யம் அக்ரோ கிளினிக் அரங்கம்



விவசாயத்தை தொழிலாக்குவோம்! விவசாயிகளை தொழிலதிபராக்குவோம்!!

# இளம் விஞ்ஞானியின் சோலார் விதைப்புகருவி

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள புனித செபஸ்தியார் மெட்ரிகுலேசன் பள்ளியில் 8-ம் வகுப்பு பயின்ற மாணவரான எம்.சுபாஷ்சந்திரபோஸ் கண்டுபிடித்த சோலார் விதைப்பு கருவிதான் இந்தக் கருவியின் மேல் பக்கம் 12 Volt Solar Panel பொருத்தப் பட்டுள்ளது. சூரிய ஒளி எப்பொழுதும் சீராக இருக்காது. அதனால் எப்போதுமே இயங்குவதற்கு ஒரு பேட்டரியும், இன்வர்ட்டரும் இணைக்கபட்டுள்ளது. இந்தக் கருவி இயங்குவதற்கு Quarter HP மோட்டார் பொருத்தபட்டுள்ளது. இந்த கருவி மோட்டாருக்கு 230 volt தேவைப்படுகிறது. அதனால் 12 Volt batteryயை வைத்து 12 volt - 230 volt ஆக மாற்றுவதற்கு இன்வேர்ட்டர் வைக்கப்பட்டுள்ளது.

முதலில் இந்தக் கருவியின் மேல் பக்கம் 12 Volt Solar Panel பொருத்தப் பட்டுள்ளது.





சூரிய ஒளி எப்பொழுதும் சீராக இருக்காது. அதனால் எப்போதுமே இயங்குவதற்கு ஒரு பேட்டரியும், இன்வர்ட்டரும் இணைக்கபட்டுள்ளது.

இந்தக் கருவி இயங்குவதற்கு QuarterHP மோட்டார் பொருத்தபட்டுள்ளது.

இந்த கருவி மோட்டாருக்கு 230 volt தேவைப்படுகிறது. அதனால் 12 Volt battery யை வைத்து 12 volt ä 230 volt ஆக மாற்றுவதற்கு இன்வேர்ட்டர் வைக்கப்பட்டுள்ளது.

இந்த மோட்டார் 1200 ஸிறிவி கொண்டது. ஆனால் இந்தக் கருவி இயங்க அவ்வளவு வேகம் தேவை இல்லை. அதனால் இந்த மோட்டாரில் இருந்து ஒரு செயின் போட்டு அதை ஒரு கியர் பாக்ஸோடு தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. இந்த கியர் பாக்ஸ் 1200 RPM - 200 RPM ஆக மாற்றி கொடுக்கிறது.

விதை போடுவதற்காக ஒரு 2 அடி நீளம் உள்ள உருளை வடிவ மரக்கட்டையின் சீரான இடைவெளியில் துளைகள் இட்டு பொருத்தபட்டுள்ளது.

அதன் மேல் 2 அடி நீளம் உள்ள மரப் பலகைகளை V வடிவத்தில் பொருத்தபட்டுள்ளது.

விதை குழாய் வழியாக கீழே வந்து விழும். குழாய்க்கு முன்னும், பின்னும் கொலு அமைக்கபட்டுள்ளது.

முன் புறம் உள்ள கொலு உழுதுகொண்டே செல்லும். விதை விழுந்த உடன் பின்புறம் உள்ள கொலு மண்ணை மூடிக் கொண்டே செல்லும்.

சூரிய ஒளியை பயன்படுத்தி இயங்குவதால் சுற்றுச் சூழல் மாசுபடாது.

எடை குறைவு அதனால் மண் இறுகாது.

4 வேலையாட்கள் 2



மாடுகளின் வேலைப் பளுவை குறைக்கிறது.

சீரான இடைவெளியில் விதைப்பதால் விதையோடு அளவு வீணாகாமல் தடுக்கப்படுகிறது. மண்புழு மற்றும் நுண்ணுயிர்கள் காக்கப்படுகிறது. அதிக ஆழம் தோண்டாத காரணத்தினால் மண்ணின் ஈரப்பதம் காக்கப்படுகிறது.



# விவசாயத்துறையில் 50 ஆயிரம் பேருக்காவது வேலை தரணும் 'கெத்தாக' கூறுகிறார் சத்யம் பயோ அதிபர் வி.செந்தில்குமார்!



இந்தியாவில் விவசாயத்தை தொழில் ஆக்குவோம், விவசாயிகளை தொழில் முனைவோராக்குவோம் என்ற கோஷத்தை முன்னெடுத்து இருக்கிறார் மாண்புமிகு நம் பாரத பிரதமர் திரு.நரேந்திரமோடி அவர்கள்.

இதே கோஷத்துடன் கடந்த 19 ஆண்டுகளாக தீவிரமாக செயல்பட்டு வருகிறார் மதுரையை தலைமையிடமாக கொண்டு செயல்படும் இயற்கை உரங்கள் தயாரிப்பு நிறுவனமான சத்யம் பயோ குழுமத்தின் தலைவரான வி.செந்தில்குமார். 2004-ம் ஆண்டில் தொடங்கப்பட்ட இவரது சத்யம் பயோ சக்தி இயற்கை உரம் நிறுவனம் கடல் வழித்தாவரங்களில் இருந்து கிடைக்கின்ற மூலப்பொருட்களில் இருந்து சக்தி இயற்கை உரங்கள் தயாரிக்கும் முயற்சியை முன்னெடுத்தது.

இந்த இயற்கை உரங்களால் ஏற்கனவே பாழாகிப்போன மண் கூட மீண்டும் உயிர் பெற்று வளமான விளைச்சலுக்கு வழிவகுத்திருப்பதைப்பார்த்து பூரித்துப்போன விவசாயிகள் வி.செந்தில்குமாரின் தயாரிப்புகளை அதிக அளவில் வாங்கி பயன்படுத்த தொடங்கினர்.

ஒரு பக்கம் அதிகரிக்கின்ற மண்வளம், இன்னொரு பக்கம் அமோகமான விளைச்சல் என இரட்டைப்பயன்களால் விவசாயிகளிடம் சக்தி இயற்கை உரங்களுக்கு கிடைத்து வரும் வரவேற்பை கண்டு தனது தயாரிப்புகளை விரிவுப்படுத்தினார் வி.செந்தில்குமார்.




சத்யம் பயோ, சக்தி கிஸான் கேர் என்ற நிறுவனங்களின் மூலமாக சக்தி இயற்கை உரங்கள், ஸ்ரீசமுத்ரா இயற்கை உரங்கள் என்ற பெயர்களில் அனைத்துவகை பயிர்கள், தானியங்கள், காய்கறிகள், பழங்கள், தென்னை, வாழை மற்றும் அனைத்து வகையான பணப்ப யிர்கள், வீட்டுத்தோட்டங்கள், மாடித்தோட்டங்கள் என அனைத்து வகை விவசாயத்துக்கும் ஏற்றவகையில் சக்தி சர்கா ஜெல்லி, சக்தி சம்பூர்ணா, சக்தி எர்த்பவர், சக்தி அமோகா, சக்தி கிராப்டாப், சக்தி கோகோபவர், சக்தி பனானா பிளஸ், சக்தி சாயில்கோல்டு, சக்தி அஸ்கோ கிங், சக்தி கோல்டுஜெல், சக்தி சில்வர்ஜெல் என 22க்கும் மேற்பட்ட உரங்களை தயாரித்து வருகிறார். இதற்கென மதுரைக்கு அருகில் இரு தொழிற்சாலைகளும் இயங்கி வருகின்றன.

சக்தி இயற்கை உரங்கள் தமிழகம் மட்டுமின்றி, இந்தியா முழுக்க



பரவலாக விற்பனையாகி வருகிறது. லட்சக்கணக்கான விவசாயிகள் சக்தி இயற்கை உரங்களை வாங்கி பயன்பெற்று வருகின்றனர்.

விவசாயிகளுக்கு இயற்கை உரங்கள் மட்டுமின்றி, அவர்கள் வளர்க்கின்ற கால்நடைகளுக்கான சத்தான தீவனங்கள், மக்கள் நோயற்ற வாழ்வு வாழ வேண்டும் என்பதற்காக ஆரோக்கியமான இயற்கை உணவுகள் இம்மூன்றும் ஒரே இடத்தில் கிடைக்க வேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல் விவசா யிகள் தாங்கள் எதிர்கொள்கின்ற பிரச்சனைகளுக்கும் தீர்வுகளை ஒரே இடத்தில் பெற வேண்டும் என்பதற்காவே தற்போது ஷிகிஜிபிசீகிவி கிநிஸிளி சிலிமிழிமிசி என்கிற விற்பனை மையங்களை துவக்கி உள்ளார் வி.செந்தில்குமார்.

இது குறித்து அவர் கூறியதாவது-

விவசாயத்தை அடிப்படையாக கொண்ட நாடான இந்தியாவில், இயற்கை விவசாயத்தையும், இயற்கை உரங்களின் பயன்பாட்டையும் முன்னெடுத்து செல்லும் முயற்சியாக கடந்த 2004-ம் ஆண்டில் மதுரையை தலைமையிடமாக கொண்டு தொடங்கப்பட்ட சத்யம்பயோ நிறுவனம் இந்தியா முழுமைக்கும் தனது செயல்பாடுகளை விரிவுப்படுத்தி உள்ளது. எங்களது சத்யம் பயோ, சத்யம் கிஸான்கேர் நிறுவனங்களின் தயாரிப்பு இயற்கை உரங்களை லட்சக்கணக்கான விவசாயிகள் பயன்படுத்தி பயனடைந்து வருகின்றனர். இரசாயன பாதிப்புகளில் இருந்து மண்ணையும், இதர இயற்கை வளங்களையும் பாதுகாப்பதுடன், விவசாயத் தோழர்களுக்கு இயற்கை உரங்கள் வாயிலாக அதிக மகசூலை பெற்றுத்தருவதை தலையாயக்கடமையாக கொண்டுள்ளது சத்யம்பயோ.

இயற்கை விவசாயத்திலும், இயற்கை உரங்கள் பயன்படுத்துவதிலும் விவசாயிகள் முழுக்கவனம் செலுத்தி வரும் இவ்வேளையில், அவர்களுக்கு உறுதுணையாக இருக்கும் வகையிலும், விவசா யிகளின் செலவையும், வீண் அலைச்சலையும் மிச்சப்படுத்துகின்ற நோக்கத்துடன் தமிழகம் முழுக்க ஆயிரம் சத்யம் அக்ரோ கிளினிக்குகளை தொடங்க திட்டமிட்டுள்ளோம். இதன் முதல்கட்டமாக மதுரை மாவட்டம் அலங்காநல்லூர், ஒத்தக்கடையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வளாகம், கோயம்புத்தூர் மாவட்டம் தொண்டாமுத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் சத்யம் அக்ரோ கிளினிக்குகள் தொடங்கப்பட்டுள்ளன.

சத்யம் அக்ரோ கிளினிக் வாயிலாக விவசாயிகள் இயற்கை உரங்கள், இடுபொருட்கள் உள்ளிட்ட அனைத்து விவசாய தேவைகளையும் பெற முடியும் என்பதோடு இதர விவசாயப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான வழிகாட்டுதல்களையும், ஆலோசனைகளையும் பெற முடியும். இதற்கென ஒவ்வொரு சத்யம் அக்ரோ கிளினிக்கிலும், பி.எஸ்.சி., (அக்ரி) அல்லது டிப்ளமோ (அக்ரி) படித்து உரிய பயிற்சி பெற்ற பட்டதாரிகள் நியமிக்கப்பட்டு, விவசாயிகளுக்கு உரிய வழிகாட்டுதல்களை வழங்குவார்கள். இவர்களுக்கு கீழ் நியமிக்கப்பட்டுள்ள கள அதிகாரிகள் விவசாயிகளின் நிலங்களுக்கே நேரடியாக சென்று ஆலோசனைகளை வழங்குவதுடன் விவசாயிகளின் நடவுக்காலம் தொடங்கி அறுவடைக்காலம் வரை தொடர் கண்காணிப்பையும் மேற்கொள்வார்கள். இதன் மூலம் விவசாயிகள் முழுமையான லாபம் பெறுவதற்கு சத்யம் அக்ரோ கிளினிக் உறுதுணையாக இருக்கும்.

தமிழகம் உள்ளிட்ட 5 தென் மாநிலங்களில் 5 ஆயிரம் சத்யம் அக்ரோ கிளினிக்குகளை தொடங்குவதை இலக்காக கொண்டிருக்கிறோம். இதன் மூலம் படித்த, பாமர கிராமப்புற இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் சுமார் 50 ஆயிரம் பேருக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகளை வழங்கவும் உறுதி பூண்டுள்ளோம்.

இதே போல கடல்பாசி தயாரிப்பு மற்றும் சேகரிப்பை அடிப்படையாக கொண்டுள்ள கடலோர பகுதிகளில் வசிக்கின்ற மகளிர் சுய உதவிக்குழு பெண்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கவும், தமிழக அரசுடன் மதுரை சத்யம் பயோ நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டு, அதனை செயல்படுத்தி வருகிறது.

விவசாயத்தை தொழில் ஆக்குவோம், விவசாயிகளை தொழிலதிபராக்குவோம் என்பதே சத்யம் பயோவின் தாரக மந்திரம். இதையே நமது மதிப்பிற்குரிய பாரதப்பிரதமர் திரு.நரேந்திரமோடி அவர்களும் குறிப்பிட்டிருக்கிறார். விவசாய பூமியான இந்தியாவை

11.08.2023

வளமிக்க, வலிமையான நாடாக்கும் மத்திய, மாநில அரசுகளின் முயற்சிகளுக்கு சத்யம் பயோ உறுதுணையாக இருக்கும் என்கிறார் மதுரை சத்யம் பயோ நிறுவனத்தலைவரான திரு.வி.செந்தில்குமார் அவர்கள்.

இந்த மதுரை வாழ் தமிழனின் தயாரிப்புகளான சக்தி இயற்கை உரங்களைப் பற்றி வெளிநாட்டினரும் கூட ஆர்வமாக விசாரிக்கத் தொடங்கி உள்ளனர். கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாக சீனாவில் நடந்து வரும் சர்வதேச வேளாண்மை வர்த்தக கண்காட்சியில் சத்யம் பயோ குழுமத்தின் தயாரிப்பு உரங்களும் தவறாமல் இடம்பெற்று வருவதுடன், கண்காட்சியில் பங்கேற்கும் சர்வதேச நாடுகளின் வேளாண் நிபுணர்களின் பாராட்டுகளையும் குவித்து வருவதோடு பாரதத்தின்



பெருமையையும் பறைசாற்றி வருகிறது. சத்யம்பயோ நிறுவனத்தின் தயாரிப்புகளின் தரத்துக்கு விவசாயிகள் மட்டும் சான்றல்ல… வேளாண் துறை சார்ந்த அரசு மற்றும் அரசுத்துறை சார்ந்த, பிற பிரபலமான அமைப்புகள் வழங்கி உள்ள விருதுகளும், சான்றிதழ்களும்தான். தொழில் தலைமைப்பண்பு விருதுகள், புதுமையான கண்டுபிடிப்புக்கான கவின்கேர் நிறுவனத்தின் சின்னிகிருஷ்ணன் இன்னோவேஷன் விருது, இளம் தொழிலதிபர் கூட்டமைப்பின் யெஸ் பெஸ்ட் இன்னோவேஷன் விருது, மதுரை மடீட்சியாவின் விஸ்வேஸ்வரய்யா விருது, மலேசியாவின் தேசம் மீடியா சாதனையாளர் விருதுகள் என இவருக்கான விருதுகளின் மகுடத்தில் மாணிக்கக்கல்லாய் சமீபத்தில் இணைந்திருப்பது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், டெல்லி அறிவியல் தமிழ் இயக்கம் இணைந்து நடத்திய தேசிய வேளாண் அறிவியல் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் வழங்கப்பட்ட சிறந்த இயற்கை உரம் தயாரிப்பு நிறுவனத்துக்கான தங்கப்பதக்கம் ஆகும். வி.செந்தில்குமார் போன்ற துடிப்புமிக்க இளைஞர்களால் இந்தியாவில் விவசாயமும், விவசாயிகளும் நீண்ட காலம் வாழ்வார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

தொடர்புக்கு : 75508 75508






# ஆடிப்பட்டம் ஏன் தேடி விதைக்கிறோம்?

ஆடி மாதம் விளைநிலங்களுக்கான முதல் மழையைக் கொண்டுவரும் மாதம். ஆறுகளில் புது வெள்ளம் பாயும். விவசாயிகள் புதுவெள்ள நீரைத் தொழுது தங்கள் உழவுப் பணிகளைத் தொடங்குவர். இதனால்தான் ஆடிப் பட்டம் தேடி விதை என்னும் பழமொழி ஏற்பட்டது.

புது வெள்ளத்தை வரவேற்கும் ஆடி 18ம் தேதியும், அதற்குப் பிறகு விதைக்கும் விதைகள் நன்றாக முளைக்கும்.

தண்ணீர் பாய்ச்சி பயிர் செய்வதென்றால் குறுவை சாகுபடியில் நெல் விதைக்க தொடங்குவார்கள். விவசாயம் சார்ந்த ஊரில் ஆடிப் பெருக்கு வெகு சிறப்பாக கொண்டாடப்படும். புதிதாக திருமணமான தம்பதிகள் திருமணமான மாலைகளை பத்திரமாக வைத்திருந்து அன்றைய தினம் ஆற்றில் விடுவது வழக்கம்.



ஆடி மாதத்தில் ஓரிரு முறை வயலுக்கு தண்ணீர் பாய்ச்சினால் போதும், புரட்டாசியில் இருந்து தொடர்ச்சியாக கிடைக்கும் மழையின் உதவியால் பயிர் வளர்ந்துவிடும். மேலும் இந்த மாதத்தில்தான் மண்ணில் விழும் விதைகள் முழுமையாக முளைக்கத் தேவையான அருமையான தட்பவெப்ப ஸூழ்நிலை நிலவும். மானாவாரி பயிர்களுக்கு ஆடிப்பட்டம் மிகவும் சிறந்த பட்டமாகும். பொன்னியின் செல்வன் புதினத்தில் வந்தியத் தேவன் ஆடி மாதத்தில் காவிரிக் கரையோரமாக பயணம் செய்யும் போது ஆடிப் பெருக்கு விழாவை அவ்வளவு அழகாக வர்ணித்திருப்பார் ஆசிரியர் கல்கி.

ஆடி மாதம் விவசாய பணிகள் தொடங்க சரியான காலமாக தமிழகத்தில் தொன்று தொட்டு அறியப்படுகிறது.

இதனால்தான் நம் முன்னோர்கள் ஆடிப் பட்டம் தேடி விதை என்னும் பழமொழியை கூறியுள்ளார்கள்.

மேலும் ஆடி மாதத்தில் ஓரிரு முறை வயலுக்கு தண்ணீர் பாய்ச்சினால் போதும், புரட்டாசியில் இருந்து தொடர்ச்சியாக கிடைக்கும் மழையின் உதவியால் பயிர் வளர்ந்துவிடும். மேலும் இந்த மாதத்தில்தான் மண்ணில் விழும் விதைகள் முழுமையாக முளைக்கத் தேவையான அருமையான தட்பவெப்ப ஸூழ்நிலை நிலவும். ஆடி 18ம் தேதியும், அதற்குப் பிறகு விதைக்கும் விதைகள் நன்றாக முளைக்கும். தண்ணீர் பாய்ச்சி பயிர் செய்வதென்றால் குறுவை சாகுபடியில் நெல் விதைக்க தொடங்குவார்கள். ஆனால், மானாவாரி பயிர்களுக்கு ஆடிப்பட்டம் மிகவும் சிறந்த பட்டமாகும்.

ஆடியில் நடவுக்கு ஏற்ற பயிர்கள் :

உளுந்து, சோளம், கம்பு, குதிரைவாலி உள்ளிட்ட தானியங்கள் விதைக்கலாம். குறிப்பாக, சாமை விதைப்புக்கு ஏற்ற அருமையான பட்டம். அவரை, கத்திரி, தக்காளி போன்ற காய்கறி பயிர்களைச் சாகுபடி செய்யலாம். “வாழை” நடவுக்கு ஏற்ற மாதம். ஆனி மற்றும் ஆடிப்பட்டங்கள் “செம்பருத்தி” சாகுபடிக்கு ஏற்றவை.


சத்யம் விவசாயிகள் கிளப்
SATHYAM FARMERS CLUB
சத்யம்
அக்ரோ கிளினிக்
விதை முதல் விற்பனை வரை
சத்யம் விவசாயிகள் கிளப்பின் சிறப்பம்சங்கள்
பயிர்களுக்கு ஏற்ப மாதம் ஒரு முறை அல்லது இருமுறை நேரடி கள ஆய்வு.
விவசாய நிலங்களுக்கு மண் மற்றும் தண்ணீர் பரிசோதனை.
உரமிடுதல் பணியில் சத்யம் அக்ரோ கிளினிக் பங்களிப்பு .
விளைபொருட்களை அறுவடை செய்ய வேளாண் பெருமக்களுக்கு உதவி.
வேளாண் சேவைக்கு அழைக்கவும் : +91 75508 75508
/Sathyamagroclinic
www.sathyamagroclinic.com